# செய்திகளும் குறிப்புகளும்

**14.11.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1082**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)

**20. பகுத்தறிவு வளைமுகட்டின் முடிவு**

ஆனால் சமதர்ம நாடு உண்மையிலேயே ஜனநாயக நாடாக இயங்கினாலும், உண்மையிலேயே பெரும்பான்மையினரின் சுதந்தரமான ஒப்புதலுடைய பகுத்தறிவாலுருவாக்கப்பட்ட விருப்பாற்றலின் வெளிப்பாடாக மாறினாலும் உள்ளார்ந்த இடர்ப்பாடு மறைந்து விடுவதில்லை. அந்த வகையான எந்த வளர்ச்சியும் கடினமானதாக இருக்கும், நடைமுறைக்குப் பொருந்தாத கற்பனையாகவே தோன்றும். ஏனென்றால் எந்த ஒழுங்கான சமுதாயமும், அதனுடைய சில அடிப்படைக் கோட்பாடுகளிலும் அதனுடைய முக்கிய வழிகளிலும் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவே முயலும்; கூட்டாண்மையும் அப்படிச் செய்வதாகப் பாசாங்கு செய்வதோடு மட்டுமன்றி வாழ்க்கையின் நுணுக்கங்களில் அது ஒரு மிக விஞ்ஞானபூர்வமான முழு ஒழுங்கையும், மற்றும் எல்லா வழிகளிலும் வாழ்க்கையின் விவரங்களிலும், பல இலட்சக் கணக்கானவர்களின் சுதந்தரமான பகுத்தறிவுக்கு ஏற்ற விருப்பாற்றலின் இசைவை நோக்கமாகக் கொள்கிறது. இது முன்னுக்குப்பின் முரணானதாகும். ஒழுங்குபடுத்தப்பட்ட அரசாங்க அமைப்பு எவ்வளவு தான், குறையற்றதாக இருப்பினும் தனிமனித சுதந்தரத்தை பெரும்பான்மையினரின் அல்லது ஒரு சிறுபான்மையினரின் விருப்பத்தால் அடக்குவது அல்லது ஒடுக்குவது இன்னமும் இருக்கவே செய்யும், அது அதனுடைய அடிப்படையான கோட்பாட்டை மாசுபடுத்தும் ஒரு முக்கியக் குறைபாடாக நிச்சயம் இருக்கும். மேலும் இதை விட அனந்தம் மடங்கு மோசமான ஒன்றும் இருக்கும். ஏனென்றால் வாழ்க்கையை முற்றிலும் இயந்திரத் தன்மை கொண்டதாக ஆக்கினால்தான் அதை முற்றிலும் விஞ்ஞான அடிப்படையில் ஒழுங்குபடுத்த முடியும்; எதையும் இயந்திரத் தன்மையுடையதாக்கும் இந்தப் போக்கே வாழ்க்கை முழுவதையும் அரசே கட்டுப்படுத்த வேண்டும் என்னும் கருத்தின் உள்ளடங்கிய குறைபாடாகும். ஏற்கெனவே இந்தக் குறைப்பாட்டின் மீதே அறிவுப்பூர்வமான அராஜகச் சிந்தனையும், ஆன்மீகச் சிந்தனையாளரின் உள்ளறிவும் அதிகம் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளன; மேலும் அது எல்லாம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்னும் கருத்து நடைமுறையின் பூரணமாகிவிடும் பொழுது, நிச்சயம் வெகுவாக அதிகரிக்கும். பகுத்தறிவு, வாழ்க்கையை ஆள முற்படும் பொழுது, அதனுடைய இயற்கையான போக்குக்களை அடக்கி அவற்றைப் பகுத்தறிவுக்குட்படுத்த முயலும் பொழுது, உண்மையிலேயே இதுவே அதன் உள்ளார்ந்த குறைபாடாக இருக்கிறது.

உயிர்த்தத்துவம் தூலப்பிரபஞ்சத்தின் இயந்திரம் கதியிலான ஒழுங்கிலிருந்து மாறுபடுகிறது, பின்னதனுடன் பகுத்தறிவு வெற்றிகரமாக சமாளிக்க முடிவதன் காரணம் அது இயந்திரகதியானது என்பதாலும் மற்றும் அது நிலைத்த பிரபஞ்சப் பழக்கங்களை (Cosmic habits) உடைய ஒரு வரித்தடத்தில் மாறாமல் செல்கிறது என்பதாலுமே மாறாக உயிர்த்தத்துவம் இயக்கமுடையதும், முன்னேறுவதும், படிப்படியாக வளர்வதுமான ஒருசக்தி - உயிரினங்களில் உள்ள அனந்தமான ஆன்மாவின் அதிகரித்துவரும் வெளிப்பாடு, தவிர அது முன்னேறுகையில், மேலும் மேலும் அதற்கே உரிய நுண்மையான மாறுபாடுகள், தேவைகள், வேற்றுமைகளை உணர்கிறது. உயிர்த்தத்துவத்தின் முன்னேற்றம் ஒன்றுடோன்று மோதுகிற, அடிக்கடி முற்றிலும் எதிரிடையானவைகளாகவும் வேறுபாடானவையாகவும் தோன்றுகின்ற, எண்ணற்ற விஷயங்களின் வளர்ச்சியும் இணைப்பும் ஆகும். இந்த எதிர்மறைகளின் இடையே ஏதோ ஓர் ஒற்றுமைக்கான கோட்பாட்டை, ஒத்துப்போவதற்கான ஏதோ ஒரு நடைமுறையை, அதன்மூலம் முரண்பாடும் போராட்டமும் இல்லாத ஓர் ஒத்திசைவான அடிப்படையில் ஒரு விரிவான சிறந்த வளர்ச்சியின் சாத்தியத்தை ஏற்படுத்துவதே செயலூக்க வாழ்க்கைப் பரிணாமவளர்ச்சியில், மனித இனத்தின் அதிகரித்துவரும் பொதுக்குறிக்கோளாக இருக்க வேண்டும்; அது வாழ்க்கையின் அதிகக் குழப்பமான, துயரார்ந்த மற்றும் தெளிவற்ற இயக்கத்திலிருந்து வெளியேற விரும்பினால் வாழ்க்கை-மனத்தின் அறியாமையுடனும், பருப்பொருளின் சடத் தன்மையுடனும் இயற்கை விட்டுக்கொடுத்து செய்து கொண்ட சமரச இணக்கத்திலிருந்து மேலெழ வேண்டுமானால் மனித இனம் இதைச் செய்தாக வேண்டும். இது ஆன்மா அதனுடைய மிக உன்னத மிக முழுமையான ஆன்மீக மெய்ம்மையில் தன்னைக் கண்டுணர்ந்து, அதனுடைய வாழ்க்கை மதிப்புகளைச் சித்பொருளின் மதிப்புகளாக ஒரு முன்னேறும் மேல்நோக்கிய உருமாற்றம் செய்வதன் மூலமே இதை உண்மையாகவும் திருப்திகரமாகவும் சாதிக்க முடியும்; ஏனென்றால் அங்கு அவையனைத்தும் அவற்றின் ஆன்மீக உண்மையை, அந்த உண்மையில் அவற்றின் பரஸ்பர அங்கீகாரத்தின், இணக்கத்தின் நிலைத்த காரணத்தைக் காணும். ஆன்மீகம் ஒன்றே உண்மை, மற்றவையனைத்தும் திரையிட்டு மறைக்கப்பட்ட அதன் அம்சங்கள், ஒளியார்ந்த மாறுவேடங்கள் அல்லது இருளடைந்த உருக்குலைவுகளே ஆகும். மேலும் ஆன்மீகத்திலேயே அவை அவற்றிற்குரிய சரியான வடிவத்தையும் அவற்றிடையேயுள்ள உண்மையான தொடர்பையும் காணமுடியும். இது பகுத்தறிவால் செய்யமுடியாத ஒரு வேலை. பகுத்தறிவின் வேலை இடைப்பட்டது; அது இந்த வாழ்க்கையை அறிவாற்றலால் உற்றுநோக்கிப் புரிந்துகொண்டு, வாழ்க்கைக்காக அதுபோகும் திசையையும் அந்த வழியில் அதனுடைய தன்-வளர்ச்சியின் விதிமுறையையும் கண்டுணர்வதாகும். அது தன்னுடைய பணியைச் செய்ய, தற்காலிகமாக அரைகுறை உண்மையான கருத்துகளை ஏற்றுக்கொள்ளவும், பொருள்களின் முழுமையான உண்மையின் இறுதியான வெளிப்பாடாக நிலைபெறமுடியாத அமைப்புகளை உண்டாக்கவும் வேண்டியதிருக்கிறது. பொருள்களின் முழுமையான உண்மை பகுத்தறிவின் உண்மையன்று, அது சித்பொருளின் உண்மையாகும்.

சிந்தனைப் பிரதேசத்தில் அது ஒரு பொருட்டன்று; ஏனென்றால் அங்கே பகுத்தறிவின் நோக்கம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதன்று, ஆகையால் அது மிகவும் எதிர்மறையான கருத்துக்கள் மற்றும் அமைப்புகளை ஒருங்கே இருக்கக் கஷ்டமின்றி அனுமதிக்க முடிகிறது. அவற்றை ஒப்பு நோக்க, சமரசத்தை நாட, மிகவும் வேறுபட்ட வழிகளில் இணைக்க, இடையறாது மாற்ற, விரிவாக்க, உயர்த்த முடிகிறது. ஒவ்வொரு அடியிலும் உடனடி நடைமுறை விளைவுகளைப் பற்றி எண்ணாமல் சுதந்தரமாகச் செயல்படமுடிகிறது. ஆனால் பகுத்தறிவு வாழ்க்கையை ஆள முயலும் பொழுது, அதனுடைய அமைப்புக்குக் கெட்டியான வடிவம் கொடுக்கவும், அதனுடைய கருத்துகளை நிலைப்படுத்தவும் வேண்டியதாகிறது; ஒவ்வொரு மாற்றமும் சந்தேகத்திற்குரிய விஷயமாக கடுமையானதாக, ஆபத்துள்ளதாக ஆகிறது அல்லது குறைந்தபட்சம் அப்படித் தோன்றுகிறது; இவற்றின் விளைவுகளனைத்தையும் முன்கூட்டியே வேளையில் காண முடியாமலிருக்கிறது. அதே கருத்துக்களின், கோட்பாடுகளின், அமைப்புகளின் முரண்பாடுகள் போராட்டத்திற்கும் புரட்சிக்கும் இட்டுச் செல்கின்றனவேயன்றி ஒத்திசைவான வளர்ச்சியின் அடிப்படைக்கு இட்டுச் செல்வதில்லை. எளிதில் மாறுகிற விஷயங்களின் நடுவே மாறாத நடத்தை மற்றும் நடைமுறையை அடைவதற்காகப் பகுத்தறிவு எல்லாவற்றையும் இயந்திரமயமாக்குகிறது, ஆனால் இயந்திரமயமாக்கல் பருப்பொருள் சக்திகளுடன் தொடர்புள்ள விஷயங்களில் போதுமானது. ஏனென்றால் அதுவே பருப்பொருள் இயற்கையின் விதிமுறை அல்லது தர்மத்துடன் இசைந்துள்ளது. உணர்வுள்ள வாழ்க்கையுடன் தொடர்பு கொள்கையில், அது ஒரு போதும் வெற்றியடைய முடியாது, ஏனென்றால், அங்கே அது வாழ்க்கையின் விதி முறைக்கு, அதனுடைய மிக உயர்ந்த தர்மத்திற்கு மாறுபட்டதாக இருக்கிறது. ஆகவே, சமுதாயத்தைப் பகுத்தறிவினால் ஒழுங்குபடுத்தும் முயற்சி, பகுத்தறிவினும் தாழ்ந்த சமுதாயங்களின் இயங்காநிலை மற்றும் மந்தகதியில், அடிஉணர்வில் அல்லது அரையுணர்வில் நடக்கும்.

*(தொடரும்...)*

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: நவம்பர் 16 வெள்ளிக்கிழமை - இரவு 8 மணிக்கு, "ஐ வில் கம் பேக் டேன்ஸிங் இன் தி டியூன்ஸ்" (I will come Back Dancing In The Dunes).**
*இயக்கம்: கிறிஸ்டியன் மோர்டெலெட் & ஸ்டான்சின் டோர்ஜாய் கியா,* மங்கோலியா, 2022.
மங்கோலிய திரைப்படம், *ஆங்கிலத் துணை வசனங்களுடன். காலம்: 1 மணிநேரம் 1. நிமிடம்.*

**நவம்பர் 22 வெள்ளிக்கிழமை -இரவு 8 மணிக்கு, "ஆர்.எம். என்" ("R.M.N").**
*இயக்கம்:* **கிறிஸ்டியன் முங்கியு,** ருமேனியா, 2022
இது ஒரு ஆவணப்படமாகும், *பிரஞ்சு மொழிப்படம், ஆங்கிலத் துணை வசனங்களுடன். காலம்: 1 மணிநேரம் 50 நிமிடம்.*

**கண்ணோட்டம்:** "4 மன்த்ஸ், 3 வீக்ஸ், 2 டேஸ்" மற்றும் "கிராஜுவேஷன்" ஆகிய உயர் விருது பெற்ற ருமேனிய திரைப்பட இயக்குனர், ரிமெடியா, ட்ரான்சில்வேனியா, ருமேனியாவில் உள்ள பல்வேறு கிராமங்களில் தனது கடைசி படத்தை உருவாக்கியுள்ளார், இந்த திரைப்படம் "மூளையின் ஆய்வு, மேற்பரப்பிற்கு அடியில் உள்ள விஷயங்களைக் கண்டறிய முயற்சிக்கும் மூளை ஸ்கேன்" என்பதால், அணு காந்த அதிர்வுக்கான ருமேனிய சுருக்கத்தின் பெயரை முங்கியு பெயரிட்டார்.
இது 2020-இல் நடந்த டெட்ராவ் இனவெறி சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது!
***சுருக்கம்:*** கிறிஸ்மஸுக்கு சில நாட்களுக்கு முன்பு, மத்தியாஸ் ஜெர்மனியில் தனது வேலையை விட்டுவிட்டு தனது டிரான்சில்வேனியன் கிராமத்திற்குத் திரும்புகிறார். அவர் தனது மகன் ரூடியின் கல்வியின் மீது அதிகம் கவனம் செலுத்த விரும்பினார். அவர் தனது வயதான தந்தை ஒட்டோவுடன் பிஸியாக இருக்கிறார், மேலும் தனது முன்னாள் காதலரான சிசில்லாவைப் மீண்டும் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறார். சிசிலா நிர்வகிக்கும் சிறிய தொழிற்சாலையில் புதிதாக சில பணியாளர்கள் பணியமர்த்தப்படுவதால், சமூகத்தின் அமைதி குலைகிறது. அடிப்படையான அச்சங்கள் பெரியவர்களைப் பற்றிக் கொள்கின்றன, மேலும் நம்பிக்கையின்மை, மோதல்கள், வெளிப்படையான புரிதல், அமைதி மெல்லிய முகப்பின் மூலம் வெடிக்கின்றன... 2022 கேன்ஸ் திரைப்பட விழாவின் அதிகாரப்பூர்வ போட்டிக்கு இந்தத் திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ருமேனியத் திரைப்படம், *ஆங்கிலத் துணை வசனங்களுடன். காலம்: 2 மணிநேரம் 05 நிமிடம்.*
**குறிப்பு: நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன! - ஆரோஃபிலிம் கலெக்ஷன் நிதிச்சேவை கணக்கு எண் 252658**

---

**ஆரோஃபில்ம் - அனிமேஷன் திரைப்படம் உருவாக்கும் செயல்பாடுகள்**
(AUROFILM - Animation Film-making Activities)

வாராந்திர பயிலரங்குகள் - நடத்துபவர் அபிஜித்
நேரம் : காலை 09:30 - 11:30 மணி அல்லது 10:30 - 12:30 மணி.

- திங்கள் : கருத்துரு வடிவமைப்பு அறிமுகம்.
- செவ்வாய் : பாத்திர வடிவமைப்பு அறிமுகம்
- புதன் : கலர் தியரி அறிமுகம்
- வெள்ளி : ஸ்டோரிபோர்டிங்கிற்கான அறிமுகம்
- சனி : திரைக்கதைக்கான அறிமுகம்

இடம்: ஆரோஃபில்ம் ஸ்டுடியோ, கலாபூமி, ஆரோவில். · afacademy.team@gmail.com · +91 8300364055 வாட்ஸ்அப்

---

**பிசியோதெரபி சேவை** (Physiotherapy service)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
என் பெயர் ஸ்ருதி, 26 வயது, ஆரோவில்லில் பிறந்து வளர்ந்தேன். நான் பிசியோதெரபியில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளேன், மேலும் நான் எலும்பியல் துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ளேன். உங்கள் வீட்டிற்கு வந்து இச்சேவையை வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

வழங்கப்படும் சேவைகள்:
- கழுத்து வலி
- கீழ்ப்பக்க முதுகு வலி
- முழங்கால் வலி
- குதிகால் வலி
- உறைந்த தோள்பட்டை
- தோள்பட்டை வலி
- தசை காயம்
- தசைநார் காயம்
- சுளுக்கு மற்றும் திரிபு
- விளையாட்டினால் ஏற்பட்ட காயங்கள்
- சியாட்டிகா
- எலும்பு முறிவுக்குப் பின்/ அறுவைச்சிகிச்சை மறுவாழ்வு
- ஸ்ட்ரோக்/ பக்கவாதம்
- முகவாதம்/பெல்ஸ் பால்ஸி
- பொது உடற்பயிற்சி
- பணிச்சூழலியல் ஆலோசனை
- முதியோர் பராமரிப்பு

வலி என்பது கவனிக்கப்பட வேண்டிய அறிகுறியாகும்.
உங்கள் வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்றால், தயவுசெய்து என்னைத் தொடர்பு கொள்ளவும்.
ஸ்ருதி - 7904769496 அழைப்பு/ வாட்ஸ் ஆப். auroshruthi@auroville.org.in

---

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – பலவீனங்கள் – அச்சம்**

**அச்சம் எப்பொழுதும் மிக மோசமான ஆலோசகன்.**
**உணர்ந்தும் உணராமல் இருக்கும் அச்சமே எல்லாத் தொல்லைகளுக்கும் காரணம்.**
**அச்சம் இல்லாவிட்டால் ஒன்றும் நடந்துவிடாது.**
**அஞ்சாதே, உன்னுடைய தன்னம்பிக்கையை விடாதே. இந்தத் தொல்லைகள் எல்லாம் நீங்கிவிடும்.**
**என் அன்பும் ஆசீர்வாதமும்.**

## **குண்டலினி யோகாவின் சக்தியை அனுபவியுங்கள்** (Experience the Power of Kundalini Yoga)



சுவாசம், இயக்கம், தியானம் ஆகியவற்றின் மூலம் உங்கள் ஆன்மாவை மேன்மை அடையச் செய்து, உங்கள் உள் ஆற்றலை எழுப்புங்கள்.

குண்டலினி யோகா பல நன்மைகளை வழங்குகிறது:
**உடல் நலன்கள் -** குண்டலினி யோகா நெகிழ்வுத்தன்மை, வலிமையை மேம்படுத்தும். மேலும் சமநிலை, வலியைக் குறைக்கும், ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

**மனத் தெளிவு** - தினசரி பயிற்சி மனத்தை ஒருமுகப்படுத்துதலை மேம்படுத்தும், மனஅழுத்தத்தைக் குறைக்கும், உணர்ச்சிகரமான நல்வாழ்வை மேம்படுத்தும், இது அமைதியான மற்றும் மையப்படுத்தப்பட்ட மனதிற்கு வழிவகுக்கும்.

**ஆன்மீக வளர்ச்சி** - குண்டலினி யோகா உங்கள் உள் ஆன்மாவுடன் இணைக்கவும், உள்ளுணர்வை விரிவுபடுத்தவும், ஆழ்ந்த நோக்கம் மற்றும் அர்த்தத்தை அனுபவிக்கவும் உதவும்.

கிரியேட்டிவிட்டியில், ஹால் ஆஃப் லைட் - வியாழக்கிழமை தோறும் மாலை 5 மணிக்கு
விவரங்கள்: முன்பதிவின்றி நேரடியாக இவ்வகுப்புகளுக்கு வரலாம். தயவுசெய்து 5 நிமிடம் முன்னதாக வரவும். உங்களது யோக விரிப்பின் மேல் போடுவதற்கு ஒரு துணியையும், தண்ணீரும் கொண்டு வாருங்கள். பங்களிப்புக் கட்டணம்: விருந்தினர்களுக்கு ₹350. சாவி தன்னார்வலர்களுக்கு ₹150.

தொடர்புக்கு: பெல் வாட்ஸ்அப் +91 7598892065 ஒரு சான்றளிக்கப்பட்ட குண்டலினி யோகா ஆசிரியர்.

---

## **மைண்ட்ஃபுல்னஸ் கைன்ட்ஃபுல்னஸ் - அரைநாள் ரீட்ரீட் (ஹெலனுடன்)**
(Mindfulness Kindfulness - half day retreat (with Helen)

**நவம்பர் 30 சனிக்கிழமை (காலை 9.15-12.30) கிரியேட்டிவிட்டி ஹால் ஆஃப் லைட்.**



இந்த அரை நாள் ரீட்ரீட், அன்றாட வாழ்க்கையின் மன அழுத்தம் மற்றும் குழப்பங்களிலிருந்து விடுபடவும், அமைதியின் இந்த ஆழ்ந்த இடத்தில் புத்துயிர் பெறவும் வாய்ப்பளிக்கிறது. வாழ்க்கையின் வேகத்தை மாற்றவும், ஆழ்ந்த கவனத்துடன், இங்கேயும் இப்போதும் கவனத்தைத் திருப்பவும் இது ஒரு அழைப்பு.
இந்த அமர்வு, நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் மென்மையாக்குதல், கவனிப்பு மற்றும் இரக்கத்தை நோக்கி ஒரு உள் இயக்கத்தை அனுமதிக்கும், இரக்கத்தின் பிரதிபலிப்போடு நினைவாற்றல் தியானப் பயிற்சிகளை இணைக்கும்.
பங்கேற்பாளர்கள் உட்கார்ந்த நிலையில் (நாற்காலி அல்லது குஷன் மீது) அல்லது படுத்துக்கொண்டு (யோகா மேட்டில்) பயிற்சி செய்யலாம். இது அனைவருக்கும் பொருந்தும் - தியானத்திற்கு புதியவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த தியானம் செய்பவர்கள் தங்கள் பயிற்சியை ஆழப்படுத்தலாம்.
முன்பதிவு தேவை. ஹெலனிடம் 7094753054 என்ற வாட்ஸ்அப் எண்மூலம் பதிவு செய்யவும் அல்லது innersightav.org -ஐப் பார்வையிடவும்.

---

## **எச்ஆர் பிசிசியின் அறிவிப்பு** (Announcement From HR BCC)

பிசிசி ஃபைனான்ஸ் அலுவலகத்திற்கு இரண்டு உறுப்பினர்கள் தேவை. அதற்குத் தேவையான தகுதிகள் குறித்து கீழே காணவும்.
1. கல்வித்தகுதி: வணிகத்தில் இளங்கலைப் பட்டம்/முதுகலைப் பட்டம்.
2. அனுபவம்: குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் கணக்குப்பதிவில் பணிபுரிந்திருக்க வேண்டும்,
3. தேவையான திறன்கள்: இருப்புநிலைக் குறிப்பின் ஆய்வு, பகுப்பாய்வு, வழங்கல் திறன்.
4. பிற திறன்கள்: ஆங்கிலத்தில் சிறந்த புலமை, ஆங்கிலத்தில் தகவல் தொடர்பு, கணினியில் புலமை, எம்எஸ் ஆபிஸ், பிபிடி... போன்றவை.

விண்ணப்பதாரர்கள் hr-bcc@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும் அல்லது காப்பக அலுவலகத்திற்கு மேலே உள்ள எங்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வரவும்.
எச்ஆர் சார்பாக, *சுரேஷ், ராஜா*

---



## **நொதித்தல் வகுப்பு** (Fermentation class)

அன்பார்ந்த பாக்டீரியா பிரியர்களே,
இந்த நவம்பர் 16ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு, ***எசென்ஸ் ஆஃப் கிறிஸ்மஸ்*** என்றழைக்கப்படும் கம்புச்சாவின் மூன்றாவது நொதித்தல் வகுப்பை நடத்துகிறோம்.

உங்களுக்கு ஆர்வம் இருந்தால், வெள்ளிக்கிழமைக்கு முன் எங்களைத் தொடர்பு கொள்ளவும்! தொடர்புக்கு - 9487567593 இந்த வாட்ஸ்அப் எணணில் தொடர்பு கொள்ளவும்.

வாழ்த்துக்கள், *மேடில்ட்*

---

**கியூடியி எலக்ட்ரிக் ஸ்கூட்டர் சேவை (QUTEE Electric Scooter Service)**

அனைத்து பிராண்டுகளின் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களுக்கும் குறிப்பாக பல ஆண்டுகளாக இங்கு தயாரிக்கப்படும் ஸ்கூட்டர்களுக்கும் (ஹம்வி) தரமான சேவை எளிதில் கிடைக்கிறது என்பது ஆரோவில்லில் உள்ள பலருக்குத் தெரியாது. கியூடியி சேவை மையம், பஞ்சர் சேவைக்கு முன் தார்ச் சாலையில் இருந்து ஆரோவில்லின் செர்டிடியூட் நுழைவாயிலுக்கு அருகில் சாலைச் சேவைக்கு எதிரே அமைந்துள்ளது. புதிய மற்றும் பழைய மின்சார ஸ்கூட்டர்களை பழுதுபார்க்கலாம், பராமரிப்பு அல்லது மாற்றலாம். மேலும் பேட்டரி சேவைகள் (மறுசுழற்சி, பழுதுபார்ப்பு, மாற்றுதல்), தடையில்லா மின்சாரம் (யுபிஎஸ்) மற்றும் சோலார் சிஸ்டம் சேவைகளும் ஏற்பாடு செய்து தரப்படும். அனைத்து வேலைகளும் கோவிந்தராஜ் அவர்களால் (ஆரோவில்வாசி) பல தசாப்த அனுபவத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் தேவைகளுக்கு கியூடியி (Qutee) 9443372418/WA 9092637055 அல்லது மின்னஞ்சல்: govindaraj@auroville.org.in தொடர்பு கொள்ளவும். மின்சார போக்குவரத்து மற்றும் சூரியசக்தி ஆகியவை மேம்படுத்தப்படும்.
*கியூடியி எலக்ட்ரிக் ஸ்கூட்டர் சேவைக்காக பி (B)*

---

**குயிலைப் படைப்பு மையத்திற்கு பின்வருவனவற்றில் உதவி தேவை**


Mother's Symbol

அன்பர்களே,
***"ஸ்ரீ அன்னையின் பண்புகள் பற்றிய ஒருங்கிணைந்த செயல்பாடுகள்"*** என்ற நோக்கில் நாங்கள் ஒரு சிறந்த தயாரிப்பு மற்றும் வேலைத் திட்டங்களைச் செய்து வருகிறோம், மேலும் சில யோசனைகள், தகவல்கள், பொருட்கள், கதைகள், இணைப்புகள், படங்கள் மற்றும் கதைகளுடன் சில குழந்தைகள் புத்தகங்களை உருவாக்குவதற்கான நேரடி அல்லது ஆன்லைன் ஆதரவை மிகவும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கிறோம். காலண்டர்கள், தோட்ட வேலை, கைவினை, தையல், விளையாட்டுகள் மற்றும் பல. நீங்கள் எப்படி உதவ விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றித் தெரிவிக்க எங்களைத் தொடர்பு கொள்ளவும். 5 முதல் 13 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம்.

நேரம்: திங்கள் முதல் சனி வரை காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை மற்றும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை.

பதிவு செய்ய, தயவுசெய்து எழுதவும்- மின்னஞ்சல்: kuilaicreativecentre@auroville.org.in வாட்ஸ்அப்: + 91-86084 73385 / 9843195290
*குயிலைப் படைப்பு மையம்*

---



**வாட்டர்கலர் நுட்பங்களை ஆராயுங்கள்**
**(Explore Watercolor techniques)**

திரு. K. ஜானகிராமன், ஓவியக்கலைஞர், அவர்களுடன் ஓவியம் வரையக் கற்றுக்கொள்ளுங்கள்

**பெரியவர்கள் முன்பதிவின்றி நேரடியாக வரலாம் -**
வியாழன், வெள்ளி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
பங்களிப்புத்தொகை வரவேற்கத்தக்கது.

**குழந்தைகளுக்கான வகுப்புகள்**
சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை.
பங்களிப்புத்தொகை மாதம் 200 ரூபாய்.

**இடம்:** யூனிட்டி பெவிலியன் - கிரவுன் ரோடு - ஆரோவில்

ஓவியர் மொபைல் எண் : 80153 62636
அலுவலகத் தொலைபேசி எண் : 0413 - 262 35 76

*சமர்ப்பித்தவர் - லிசா*

---



**17.11.2024 அன்று ஸ்ரீ அன்னையின் அறை தரிசனம் (The Mother's Room Darshan On 17th November)**
ஸ்ரீ அன்னையின் அறை 17.11.2024, ஞாயிறு அன்று காலை 5 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை தரிசனத்திற்காக திறந்திருக்கும்.
ஸ்ரீ அன்னையின் அறையை அனைவரும் தரிசனம் செய்யலாம். அறை தரிசனத்திற்கு டோக்கன்கள் தேவையில்லை.
அன்புடன், *ஆண்ட்ரியா*

---

**இந்திய மூங்கில் புல்லாங்குழல் வாசிக்க கற்றுக்கொள்ளுங்கள்** (Learn to play the Indian bamboo flute)

பான்சூரி எனப்படும் இந்திய மூங்கில் புல்லாங்குழலுக்கான ஒரு மாத கால ஆரம்பப் பயிற்சி டிசம்பர் 16 முதல் வழங்கப்படும். இந்த எளிய, ஆனால் பல்துறை மற்றும் அழகான கருவியை எப்படி வாசிப்பது என்பதை அறிய இதுவே சரியான வாய்ப்பு. இந்த பயிற்சி வகுப்பு *இந்துஸ்தானி* இசை மரபில் உள்ள அடிப்படைக் கோட்பாடுகள், கருத்துகள், குறியீடுகள், கலைச்சொற்கள், முதலியன மற்றும் கருவியை வாசிப்பதற்கான நடைமுறை நுட்பங்கள், அதாவது வாய் துளைக்குள் ஊதுதல், விரல்களால் ஒலி துளைகளை மூடுதல் போன்றவை. பாடத்தின் பிற்பகுதி மாணவர்கள் *இராக* பூபாலியில் ஒரு பந்திஷ் (அதாவது ஒரு கலவை) கற்றுக்கொள்வார்கள். இப்பயிற்சி வகுப்புக்கு கட்டணம் இல்லை, ஆனால் **key of G**.-இல் உங்களுக்கு ஒரு சிறிய *பான்சூரி* தேவைப்படும். வாரத்திற்கு இரண்டு முறை (திங்கள் மற்றும் வியாழன் மாலை 4:00 மணிக்கு) ஒரு ஆரோவில் கெஸ்ட் அவுஸில் ஒரு மணிநேரம் நடைபெறும். christopher_buchanan@hotmail.com -இல் விவரங்களுக்கு கிறிஸைத் தொடர்பு கொள்ளவும்.

---

**ஆரோவில் மண்டலப் பகுதியில் கோவில் பயணம்** - ஆரோவில் மண்டலத்திலும் அதைச் சுற்றியுள்ளப் பகுதியிலும் மதப் பாரம்பரியத்தைப் பற்றி மேலும் அறிய ஆர்வமா? ஆரோவில் மண்டலப் பகுதியைச் சுற்றியுள்ள கோயில்களுக்கு வழிகாட்டுதலுடன் சுற்றுலா செல்ல வாருங்கள். **தொடங்கும் இடம் - சோலார் கிச்சன்.**
வாரம் முழுவதும் எப்போது வேண்டுமானாலும் திட்டமிடலாம். மேலும் தகவல் மற்றும் முன்பதிவு செய்ய முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

**தென்னிந்திய உணவு வகைகள் - சமையல் வகுப்பு** - ரூபாவதியுடன் தென்னிந்தியாவின் சில சுவையான உணவுகளை சமைக்க கற்றுக்கொள்ளுங்கள்.

**தாய் மசாஜ்** - தினமும் காலை 9:30 முதல் 11:30 வரை. 11:30 முதல் 1:30 வரை. மாலை 5:30 முதல் 7:30 வரை. இது இரண்டு வகுப்புகளுக்கும் பொருந்தும்.

**தையல்** - நாம் எந்த வகையான ஆடைகள், புடவை-பிளவுஸ் மற்றும் குர்தாக்களையும் தைக்கலாம் மற்றும் தனிப்பயனாக்கலாம்.

மேலே உள்ள ஏதேனும் சேவைகளுக்கு, தொடர்புத் தகவல் - தொலைபேசி/ வாட்ஸ்அப் - 8098845200.
மின்னஞ்சல் - rupavathijoy@gmail.com நன்றியுடன், *ரூபாவதி*

---

**🌿 ஷியாட்சு கருத்தரங்கு 🌿** (Shiatsu Seminar)

**ஒரு தொடு கலை**
இந்த நவம்பரில் ஒரு தனித்துவமான ஷியாட்சு கருத்தரங்கில் எங்களுடன் சேருங்கள், சிறப்பு ஷியாட்சு டச் கொடுக்கும்போதும் பெறும்போதும் உங்களுடன் "ஒத்திசைத்தல்", எனர்ஜி-லைன்கள் / மெரிடியன்கள் மற்றும் பாரம்பரிய சீன மருத்துவம் மற்றும் ஐந்து கூறுகளின் ஞானத்திலிருந்து புதிய சுகாதார நடைமுறைகளைக் கண்டறியவும்.

தேதிகள்: டிசம்பர் 12 வியாழன், - டிசம்பர் 14 சனி, டிசம்பர் 19 வியாழன், - டிசம்பர் 21 சனி,
நேரம்: ஒவ்வொரு நாளும் 4 மணி நேரம், முக்கியமாக காலையில்.
தயவுசெய்து அனைத்து அமர்வுகளுக்கும் சற்று முன் வந்துவிடுங்கள்.
இடம்: புடோகன், தேஹசக்தியில் அக்கிடோ டோஜோ

ஒரு புத்துணர்ச்சியூட்டும் மற்றும் ஊக்கமளிக்கும் அனுபவம் காத்திருக்கிறது.
அறிமுகம்: நவம்பர் 25 திங்கள், முன்பதிவு செய்த பிறகு மதியம் 1.30 - 3 மணி

பங்களிப்புத்தொகை கோரப்படுகிறது.
உல்ரிக் ஊர்வசி, mothersworkforthemotherswork@gmail.com, 0091 9751513906 (மெசஞ்சர் சர்வீஸ் சிறப்பாக செயல்படுகின்றது)

---

**சன்ரைஸ் டாக்ஸி சேவையிலிருந்து** (From Sunrise taxi service)

அன்பார்ந்த ஆரோவில் சமூக உறுப்பினர்களே,
யுடிஎஸ் இலிருந்து விலகிய சதீஷ் தற்போது சன்ரைஸ் டாக்ஸி சேவையின் புதிய நிர்வாகியாக இருக்கிறார். அவருடைய பொறுப்பின் கீழ் இச்சேவை இப்போது செயல்பட்டு வருகின்றது என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
இது ஒரு ஆரோவில் யூனிட், எதிர்கால டாக்ஸி முன்பதிவுகளுக்கு 24/7 மணிநேரமும் எங்களை அழைக்கலாம்.
அலைபேசி: 9843880591, 8610915429. அலுவலகம்: 0413-2220591, 2220592. மின்னஞ்சல்: sunrisetaxi@auroville.org.in
சன்ரைஸ் டாக்ஸி சேவைக்காக *N.சதீஷ்.*

---

**ஆரோவில் கனைக்ட்டில் இருந்து** (From Aurovilleconnect)

அன்பான நண்பர்களே,
ஆரோவில் கிரவுன் குழுவால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கிரவுன் பற்றிய அண்மையத் தகவல்களை ஆரோவில் கனைக்ட் உங்களுக்கு வழங்குகிறது. கீழே உள்ள பல்வேறு இணைப்புகளில் தெரிவு செய்து, நடந்து கொண்டிருக்கும் சிறந்த ஆராய்ச்சி மற்றும் பணிகளைப் பற்றி அறியவும்.

வாட்ஸ்அப்பில் சேரவும் - https://chat.whatsapp.com/BRFz2OC0yjV24GeQUdPnQL

பேஸ்புக் - https://fb.watch/vE4bQjn2Rw/

இன்ஸ்டாகிராம் - https://www.instagram.com/reel/DB79T3gsz39/?utm_source=ig_web_copy_link&igsh=MzRlODBiNWFlZA==
பார்த்துவிட்டு மற்றவர்களுக்குப் பகிரவும்!
*ஆரோகனைக்ட்*

---

## ஆரோவில் எர்த் இன்ஸ்டிட்யூட் பயிலரங்குகள்

கலந்துரையாடும் பயிலரங்குகள் மூலம் நமது பூமியின் பயன்படுத்தப்படாத திறனை ஆராய எங்களுடன் ஒரு அற்புதமான பயணத்தைத் தொடங்க உங்களை அழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்! இந்த தனித்துவமான சாகசமானது, கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் நிறைந்த ஒரு வளமான அனுபவமாக இருக்கும் என்று உறுதியளிக்கிறது.

குறைந்த இடங்களே உள்ளதால், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும். இப்போதே பதிவு செய்து இதில் சேரவும்!

தொடர்புக்கு: +91 9159225078 / +91 (0) 413 - 262 3330 / 262 3064

இந்த இணைப்பில் பதிவு செய்யலாம்: https://registration.earth-auroville.com/

*ஆரோவில் எர்த் இன்ஸ்டிட்யூட்*

**<u>வேலைவாய்ப்பு</u>** - எங்கள் குழுவில் இணைந்து பணியாற்ற ஒரு தகவல் தொடர்பு மற்றும் இணையதள நிபுணர் தேவை. நீங்கள் நீடித்தத்தன்மை மற்றும் கட்டடக்கலை தகவல் தொடர்பு பற்றி ஆர்வமாக உள்ளீர்களா?

எங்கள் சமூக ஊடக தளங்கள், இணையதளம், வளாகச் சுற்றுப்பயணங்கள் மற்றும் பலவற்றின் மூலம் மண் கட்டுமானத்தைப் பற்றிய அறிவைப் பரப்புவதற்கு உதவ, எங்கள் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பற்றிய உள்ளடக்கத்தை எழுதவும், கற்கவும், உருவாக்கவும் ஆர்வமுள்ள ஒருவர் எங்களுக்குத் தேவை.

இது நீங்களாக இருந்தால், எங்களைத் தொடர்பு கொள்ளவும்: info@earth-auroville.com.

தொடர்புக்கு: +91 (0) 413 - 262 3330 / 262 3064. *ஆரோவில் எர்த் இன்ஸ்டிட்யூட்*

---

## ஆரோமோட் யோகா ஸ்பேஸ் - ஆரோதைமா - ஹாஸ்பிட்டாலிட்டி அறக்கட்டளை
## <u>யோகா அட்டவணை</u>

மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் மூலம் அனைத்து நிகழ்வுகளுக்கும் முன்பதிவு செய்யப்பட வேண்டும். கட்டண அமைப்பு மற்றும் பிற விவரங்களைப் பற்றி மேலும் அறிய எங்களுக்கு எழுதவும்.

தொடர்புக்கு - மின்னஞ்சல் – balaganesh.siva@gmail.com & வாட்ஸ்அப் (மட்டும்) +91 98926 99804

| நாள் | நேரம் | விளக்கம் |
|---|---|---|
| திங்கள் - வெள்ளி | காலை 7-30 - 9.30 மணி | காலை வின்யாச யோகா , பாலாவுடன் தியானம் |
| வாரத்தின் எல்லா நாட்களும் (திங்கள் - ஞாயிறு) | மாலை 5.30 - 7 00 மணி | அருண் அல்லது பாலாவுடன் வின்யாச ஃப்ளோ யோகா |
| வியாழன் - ஞாயிறு | காலை 10.15 - 11.30 மணி | கர்லகட்டை & களரிப்பயட்டுடன் மொபிலிட்டி ஒர்க் |
| நவம்பர் 16 சனி | காலை 9.00 - 12.30 மணி | டாக்டர் லிண்டா லீயுடன் டைனமிக் சோமாடிக் யோகா & காது அக்குபஞ்சர் |

## <u>17.11.2024 - ஸ்ரீ அன்னையின் மகாசமாதி தினம்</u>

*"ஆனால் தெய்வீக நேரம் நெருங்கும்போது*
*வல்லமை மிக்க அன்னை உரிய காலத்தில் பிறப்பாள்*
*மேலும் கடவுள் மனித களிமண்ணுள் பிறப்பார்*
*உங்கள் மனித உயிர்களால் தயார் செய்யப்பட்ட வடிவங்களில்.*
*அப்போது அதி பேருண்மை மனிதர்களுக்குக் கொடுக்கப்படும்."*

**காலை 6.30 - 7 மணி: மாத்ரிமந்திரில் உள்ள ஆலமரத்தடியில் தியானம்.**

அலுவலக வாயிலில் இருந்து நுழைவு, காலை 6 மணி முதல் திறந்திருக்கும்.
விருந்தினர்கள் தங்கள் ஆரோகார்டை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
காலை 6.40 மணிக்கு ஆரோகார்டு வைத்திருப்பவர்களுக்கான கடைசி நுழைவு.
*ஓம்.*

## <u>ஸ்ரீ அன்னை அவர்கள் தம்மைப்பற்றி</u>

**நான் எந்த தேசத்தையும், நாகரீகத்தையும், எந்த சமூகத்தையும், எந்த இனத்தையும் சேர்ந்தவர் அல்ல, ஆனால் தெய்வீகத்தை சேர்ந்தவர்.**

**நான் எந்த எஜமானருக்கும், எந்த ஆட்சியாளருக்கும், எந்த சட்டத்திற்கும், எந்த சமூக மரபிற்கும் கீழ்ப்படிவதில்லை, ஆனால் தெய்வீகத்திற்குக் கீழ்ப்படிகிறேன்.**

**இறைவனிடம் நான், சித்தம், வாழ்வு, ஆன்மா அனைத்தையும் சரணாகதி செய்து விட்டேன்; அது இறைவனுடைய விருப்பமாக இருந்தால் அவருக்காக, எனது முழு இரத்தத்தையும், துளித்துளியாக, முழு மகிழ்ச்சியுடன் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்; அவருடைய சேவையில் எதுவும் தியாகம் செய்ய முடியாது, ஏனென்றால் அனைத்தும் பூரண மகிழ்ச்சி.**